# பாடத்திட்டம்

# தமிழ்

# அரசகரும மொழிகள் தேர்ச்சி

# தொகுதி- 01

அரசகரும மொழிகள் திணைக்களம்

**அரசகரும மொழிகள் தேர்ச்சித் தொகுதி – 1 பாடப் பரப்பு- தமிழ்**

## அறிமுகம்

அரசகரும மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்காக 7/2007 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து அரச உத்தியோகத்தர்களும் அவர்கள் அரச சேவையில் இணைந்து கொண்ட அரசகரும மொழிக்கு மேலதிகமாக உள்ள ஏனைய அரசகரும மொழியில் தேர்ச்சியடைய வேண்டும். அதற்கமைய சிங்கள மொழியினால் அரச சேவையில் இணைந்து கொண்ட உத்தியோகத்தர்களால் சித்தியடைய வேண்டிய அரசகரும மொழித் தேர்ச்சியின் 01 வது தொகுதியின் தமிழ் பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசகரும மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கல்வியியலாளர் குழுவினால் முன்வைக்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் உள்ளடக்கங்களை மீறாமல் அதற்கமைய இப் பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே இரண்டாம் மொழியாக தமிழ் மொழியை கற்கும் போது நீங்கள் கையகப்படுத்த வேண்டிய அறிவு, ஆற்றல் மற்றும் மனப்பான்மை என்பவைகள் இப் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இரண்டாம் மொழியைக் கற்றல் மற்றும் கற்பிக்கும் வழிமுறைகள் மற்றும் கற்கை நெறியின் மதிப்பீட்டு வழிமுறைகள் இப் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன..

பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் பாடப் புத்தகம் கற்கைநெறியைச் செயற்படுத்துவதற்கு வழிகாட்டலாக இருக்கும். கற்கைநெறியின் கற்றல் மற்றும் கற்பிக்கும் செயற்பாடுகளை அதன்படி ஒழுங்கமைத்துக்கொள்ள வேண்டும். அதற்காக இரண்டாம் மொழியினைக் கற்பித்தலுக்கு உரிய பயிற்சியைப் பெற்ற வளவாளர்களை வழங்குவது பயிலுனர்களுக்கு மிக அவசியமாகும். தமிழ்மொழியில் ர,ற,ல,ள,ழ,ன,ண ஒலிளைச் சரியாக உச்சரிக்கக் கூடிய வளவாளர்கள் கற்பிக்கவேண்டும்.மேலும் அ,ஆ,இ,ஈ,உ,எ,ஏ, க, ச, த,ப , ற எழுத்துக்களுக்கு மாற்றொலிகள் உள்ளன. அவற்றச் சரியாக உச்சரிக்கக்கூடிய வளவாளர்களே

கற்பிக்க வேண்டும். காரணம் தமிழ் மொழியில் ஒலிகள் மாறும் பொழுது கருத்து மாறுபடும். அதனால் தராதர மொழியை உச்சரிக்கக்கூடிய வளவாளர்களால் கற்பித்தல் செயல் இடம்பெறவேண்டும்.

**நோக்கம்**

1. தனியார் மற்றும் அலுவலக கடமைகளின்போது எளிமையான கலந்துரையாடல்களில் இணைவதற்காக கேட்டல் மற்றும் பேச்சுத் திறனை மேம்படுத்தல்.
2. தனியார் மற்றும் அலுவலக கடமைகளின்போது வாசிப்பதற்கு வாசிப்புத் திறனை மேம்படுத்தல்.
3. குறுகிய ஆவணங்களை எழுதுவதற்கு எழுத்துத் திறனை மேம்படுத்தல்.
4. கடிதம் எழுத, கூட்டஅறிக்கை தயாரிக்கக் கூடிய திறனை அதிகரித்தல்.
5. பேச்சு மொழியையும் , எழுத்து மொழியையும் இனங்கண்டு இரு இலக்கங்ளையும் சரியாக அறிதல்.
6. மேடையில் பேசவும், வானொலி, தொலைக்காட்சி, நிகழ்ச்சிகளைப் , புரிந்து கொள்ளும் ஆற்றலைப் பெறுதல்

**அரச கரும மொழிகள் தேர்ச்சித் தொகுதி – 1 பாடப் பரப்பு- தமிழ்**

**கற்றல் மற்றும் கற்பிக்கும் வழிமுறைகள்**

இரண்டாம் மொழியினைக் கற்பிக்கும் போது விசேடமான கற்றல் மற்றும் கற்பிக்கும் வழிமுறைகள் பயன்படுத்தப்படுகிறன. அவ்வாறான விசேட வழிமுறைகளைப் பயன்படுத்தி பயிலுநர்களுக்கு இரண்டாம் மொழியாக சிங்கள மொழியினை கற்பிப்பது பயனுள்ளதாக இருக்கும். கற்கைநெறியினைப் பயிலுவோருக்கு இப் பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாட உள்ளடக்கங்களை வழங்கும்போது பயன்படுத்தகூடிய வழிமுறைகள் மற்றும் கற்பிக்கும் உத்திகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. நேரடி முறைகள் (Direct method)
2. இலக்கண மொழிபெயர்ப்பு முறை (Grammar translation method)
3. பிரயோக முறை (Applied method)
4. இருமொழி முறை (Bilingual method)
5. எழுத்து வடிவ ஒற்றுமை முறை (Shape similarity method)
6. ஒலிப்பு முறை (Phonetic method)
7. ஒலியுடன் கூடிய மொழி முறை (Audio lingual method)
8. தேர்ந்தெடுக்கப்பட்ட முறைமை/ பன்முக முறை (Eclectic method)
9. புலனுணர்வு சார்ந்த / அறிவாற்றல் (Cognitive method)
10. சூழ்நிலை முறை (Situational method)
11. இயற்கை முறை (Natural method)
12. விகடம் நினைவாற்றல் முறை (Mimicry memorization method)

**அரசகரும மொழிகள் தேர்ச்சித் தொகுதி - 1 பாடப் பரப்பு- தமிழ்**

**மதிப்பீடு மற்றும் மதிப்பீட்டுச் செயற்பாடு**

அரசகரும மொழி தேர்ச்சியைப் பெறுவதற்குத் தொகுதி 01 ஆக தயாரிக்கப்பட்ட பாடத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு 300 மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பாடத்திட்டதிற்கு அமைவாக அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கற்கைநெறியின்போது மதிப்பீட்டுச் செயற்பாடு இரண்டு வகையாக நடைபெறும்.

1. கற்கைநெறியின் இடையில் நடைபெறும் மதிப்பீடு.
2. கற்கைநெறியின் இறுதியில் நடைபெறும் மதிப்பீடு.

1. **கற்கைநெறியின் இடையில் நடைபெறும் மதிப்பீடு.**

இங்கு கற்கைநெறியினைப் பயிலுவோர் கற்கைநெறியின் இடையில் அடிக்கடி மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்படுவார்கள். தாயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுச் சாதனங்களை உபயோகித்து நடாத்தப்படும் மதிப்பீட்டுச் செயற்பாடு குறைந்தது 25 மணித்தியாலங்களுக்கு ஒரு முறையாவது நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. முன்மாதிரி மதிப்பீட்டுச் சாதனங்கள் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் வழங்கப்படும். இதைத் தவிர கற்றல் மற்றும் கற்பிக்கும் செயற்பாடின் இடையில் ஆலோசகரினால் கற்கைநெறியினைப் பயிலுவோர் மதிப்பீடப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்ச்சியாக மதிப்பீட்டுச் செயற்பாட்டினால் எதிர்பார்ப்பது கற்கைநெறியினைப் பயிலுவோரின் உத்தேச கற்றல் பெறுபேற்றைப் பெற்றுள்ள மட்டங்களை அறிந்து கொள்ளுவதற்கும் அதற்கமைய அடுத்துவரும் கற்றல் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்குமான வாய்ப்புகளை வழங்குவதற்குமாகும். உத்தேச கற்றல் பெறுபெறுளைப் பெற்றிடாத கற்கைநெறி பயிலுவோரின் உத்தேச கற்றல் பெறுபேற்றைப் பெற்றுகொள்ளுவதற்காக தகுந்த நடவடிக்கைகள் ஆலோசகர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகிறது. உத்தேசக் கற்றல் பெறுபெறுகளை இனங்காண்பதற்கு பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் பெறுபெறுகள் வழிகாட்டலாக இருக்கும்.

2. **கற்கைநெறியின் முடிவில் நடைபெறும்** மதிப்படு.

இம் மதிப்பீட்டுச் செயற்பாடு இரண்டு கட்டங்களாக நடைபெறும்.

எழுத்துப் பரீட்சை மதிப்பெண்கள் 70% (நேரம் 04 மணித்தியாலம்)

01 வினா பத்திரம் – இலகுவான இலக்கணம் மற்றும் சொற்களை பயன்படுத்துதல் (நேரம் 02 மணித்தியாலம் , மதிப்பெண்கள் 20% )

02 வினா பத்திரம் – புரிந்துணர்வு, கட்டுரை, கடிதங்கள், சுருக்கம், மொழிபெயர்ப்பு, கூட்டஅறிக்கை ( நேரம் 02 மணித்தியாலம், மதிப்பெண்கள் 50 )

செயன்முறைப் பரீட்சை (வாய்மூல) மதிப்பெண்கள் 30% (நேரம் 30 நிமிடம்)
வாசித்தல் 05
பேசுதல் 15
செவிமடுத்தல் 10

எழுத்துப் பரீட்சை இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினாலும் செயன்முறை பரீட்சை (வாய்மொழி) அரசகரும மொழிகள் திணைக்களத்தினாலும் நடாத்தப்படும். அரசகரும மொழித் தேர்ச்சியில் சித்தியடைவதற்கு எழுத்துப் பரீட்சை மற்றும் வாய்மூலப் பரீட்சை இரண்டிலும் சித்தியடைவது அவசியமாகும். எழுத்து மற்றும் வாய்மொழி பரீட்சைகளுக்காக பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் பெறுபேறுகளை அடிப்டையாகக் கொண்டு மதிப்பீட்டுக் கூற்றுகள் தயாரிக்கப்படும். முன் மாதிரி எழுத்து மற்றும் பரீட்சை சாதனங்கள் மற்றும் மதிப்பீட்டுப் பெறுபேறுகள் கூற்றுக்கள் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் வழங்கப்படும்.

அரகரும மொழிகள் தேர்ச்சி  தொகுதி - 1 பாடப் பரப்பு- தமிழ்

| அலகு | நோக்கம் | உள்ளடக்கம் | உத்தேச கற்றல் பெறுபெறுகள் | கற்றல் மற்றும் கற்பிக்கும் வழிமுறை | நேரம் (மணித்தியாலம்) |
|---|---|---|---|---|---|
| 1 | 1.1 உரையாடல்களுக்குச் செவிமடுத்து கருத்துக்களைத் தெரிவிப்பர்.<br><br>1.2 வாழ்த்துக்களை மற்றும் நன்றி வார்த்தைகளைத் தெரிவிக்கும் சந்தர்ப்பத்திற்கேற்ப பயன்படுத்தல்.<br><br>1.3 வேற்றுமை உருபு ரை, இன்ரை ஆகியவற்றை அறிவர்.<br><br>1.4 எழுத்துக்களை எழுதுவர். | • ஒருவர் ஒருவரை அறிமுகம் செய்தல்.<br><br>• வேற்றுமை உருபு (ரை, இன்ரை) ஆகியவற்றை வைத்துக்கதைக்கப் பழகுதல்.<br><br>• எழுத்து (ட,ப,ம,ச,க,த,வ,ல,அ) ஆகியவற்றை உறுப்பாக எழுதப் பழகிச் சரியாக உச்சரித்தல். | • ஒருவர் ஒருவரை அறிமுகம் செய்யப் பழகுவார்.<br>• ரை, இன்ரை போன்ற வேற்றுமை உருபுகளைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கி பேசப் பழகுவர்.<br>• ட,ப,ம,ச,க,த,வ,ல,அ எழுத்துக்களை எழுதிப் பழகுவர். | • வினா வினவுதல்<br>• பின்பற்றல்<br>• பயிற்சி முறை<br>• ஒலிப்பு முறை | 10 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | 2.1 நாளாந்த தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு பேசப்பழகுவர்.<br><br>2.2 எழுத்துக்களை எழுதுவர்.<br><br>2.3 இலக்கம் 1-10 வரை அறிவர் | • தொலைபேசி இலக்கம்<br>• உறவுச் சொற்கள் போன்றவற்றைக் கதைக்கப் பழகுதல்.<br>• எழுத்து ற,ர,ள,ழ,ய,ஆ எழுத்துக்களை எழுதிப் பழகுதல்.<br>• இலக்கம் 1-10 வரை உச்சரிக்கப் பழகுதல். | • பிழையின்றி தொலைபேசி இலக்கங்களைச் சொல்லுவார்.<br>• உறவுச் சொற்களை அறிமுகப்படுவார்.<br>• ற,ர,ள,ழ,ய,ஆ எழுத்துக்களை எழுதுவர்.<br>• சொற்களை வாசிப்பார். | • வினா வினவுதல்<br>• பின்பற்றல்<br>• பயிற்சி முறை<br>• ஒலிப்பு முறை | 15 |
| 3 | 3.1 வினை எச்சம் அறிவர்.<br><br>3.2 வேணும்,வேண்டாம்,இல்லை போன்ற சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கி கதைக்கப் பழகுவர்.<br><br>3.3 வேற்றுமை உருபு “ஓடை” அறிவர்.<br><br>3.4 எழுத்துக்களை எழுதுவர். | • வினை எச்சம் அறிதல்.<br>• வேணும், வேண்டாம், இல்லை போன்ற சொற்களை வைத்துக்கதைக்கப் பழகுதல்.<br>• வேற்றுமை உருபு – “ஓடை” என்பதை வைத்து கதைத்தல்.<br>• எழுத்து -இ, உயிர்மெய் எழுத்துக்களை எழுதிப் பழகிச் சரியாக உச்சரித்தல். | • வினை அடி, ஏவல் வினை என்ற வினைச் சொற்களை இனங்கண்டு கொள்வர்.<br>• வேணும்,வேண்டாம்,இல்லை என்ற சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கி கதைக்கப் பழகுவார்.<br>• ஓடை, போன்ற வேற்றுமை உருபுகளைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கிக் பேசப் பழகுவார்.<br>• எழுத்துக்களை எழுதிப் பழகுவார். | • வினா வினவுதல்<br>• பின்பற்றல்<br>• பயிற்சி முறை<br>• ஒலிப்பு முறை | 15 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | 4.1 சுருக்கமான விளக்கங்களுக்குச் செவிமடுத்து பேசுவர்.<br><br>4.2 நிகழ் காலத்தை அறிவர்.<br><br>4.3 இலக்கம் 11-20 வரை அறிவர்.<br><br>4.4 வேற்றுமை உருபு ”இலை” என்பதை அறிவர்.<br><br>4.5 வந்துகொண்டு, குடிச்சுக்கொண்டு<br>வந்திட்டு, போயிற்று<br>ஆகிய சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை எழுதுவர்.<br><br>4.6 எழுத்துக்களை உறுப்பாக எழுதுவர். | • அரசாங்க அதிபருக்கும் கணகலிங் கத்துக்கும் இடையில் நடந்த உரையாடல்.<br>• நிகழ் காலம்<br>-ற் -யிற்- - க்கிற்-<br>-இற்-<br>ஆகியவற்றை உபயோகித்து கதைக்கப் பழகுதல்.<br><br>• இலக்கம் 11-20 வரை அறிதல்.<br><br>• வேற்றுமை உருபு “இலை” என்பதை வைத்து கதைத்தல்.<br><br>• வந்துகொண்டு, குடிச்சுக்கொண்டு<br>வந்திட்டு, போயிற்று போன்ற சொற்களை வைத்துக் கதைத்தல்.<br><br>• எழுத்து - வட எழுத்துக்களை உறுப்பாக எழுதிச் சொற்களை ஆக்கப் பழகுதல். | • அரசாங்க அதிபருக்கும் கணகலிங்த்துக்கும் இடையில் நடந்த உரையாடலை செய்யப் பழகுவார்.<br><br>• நிகழ் கால சொற்களை பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கிப் பழுகுவார்.<br><br>• வந்துகொண்டு, குடிச்சுக்கொண்டுஇ<br>வந்திட்டு, போயிற்று ஆகியவற்றைப் பயன்படுத்தி வாக்கியங்களை எழுதிப் பழகுவார்.<br><br>• வட எழுத்துக்களை எழுதிப் பழகுவார். | • வினா வினவுதல்<br>• பின்பற்றல்<br>• பயிற்சி முறை<br>• ஒலிப்பு முறை | 15 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | 5.1 செய்துகொண்டுஇ மூடீற்று ,<br>-ஏக்கை போன்ற பல்வேறு வாக்கிய முறைகளைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கி வாசிக்க, எழுத பேசப் பழகுவர்.<br><br>5.2 இலக்கம் 20 - 30 வரை அறிவர்.<br><br>5.3 அது, இது, உது என சுட்டுப்பெயர்களை அறிவர்.<br><br>5.4 எழுத்துக்களை எழுதுவர். | • செய்துகொண்டு<br>• மூடீற்று<br>• -ஏக்கை சொற்களை பழகுதல்.<br>• இலக்கம் 20 – 30 வரை<br>• சுட்டுப்பெயா் அது, இது, உது<br>• எழுத்து உ, ஊ, உயிா்மெய் எழுத்துக்களை எழுதி சொற்களை எழுதப் பழகுதல். | • செய்துகொண்டுஇ மூடீற்று ,<br>-ஏக்கை போன்ற பல்வேறு வாக்கிய முறைகளைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கி வாசிக்க, எழுத பேசப் பழகுவார்.<br><br>• இலக்கம் 20 - 30 வரை அறிவார்.<br><br>• அது, இது, உது என்ற சுட்டுப்பெயர்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கி எழுதிப் பழகுவார்.<br><br>• எழுத்துக்களை எழுதிப் பழகுவார். | • வினா வினவுதல்<br>• பின்பற்றல்<br>• பயிற்சி முறை<br>• ஒலிப்பு முறை | 15 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | 6.1 வந்தனான், போய் இருக்கிறன் , கூட்டிக்கொண்டு ஒண்டும், ஏதாவது போன்ற பல்வேறு வாக்கிய முறைகளைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கி வாசிக்க, எழுத பேசப் பழகுவர்.<br><br>6.2 இலக்கம் 30 - 100 வரை அறிவர்.<br><br>6.3 எதிர்காலத்தை அறிவர்.<br><br>6.4 ஐ வேற்றுமை உருபை அறிவர்.<br><br>6.5 எழுத்துக்களை எழுதுவர். | • வந்தனான், போய் இருக்கிறன்<br>• கூட்டிக்கொண்டு<br>• ஒண்டும், ஏதாவது என்ற சொற்களை வைத்து பேசப்பழகுதல்.<br>• இலக்கம் 30 – 100 இலக்கங்களை அறிதல்<br><br>• எதிர்காலம் -ப்ப்-, -வ்- உருபுகளை வைத்து கதைத்தல்.<br><br>• வேற்றுமை உருபு ஐ என்பதை வைத்து கதைக்கப் பழகுதல்.<br><br>• எழுத்து எ, ஏ, ஐ என்ற உயிர்மெய் எழுத்துக்களை எழுதி உச்சரிக்கப் பழகுதல். | • வந்தனான், போய் இருக்கிறன் , கூட்டிக்கொண்டு ஒண்டும், ஏதாவது போன்ற பல்வேறு வாக்கிய முறைகளைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கி வாசிக்க, எழுத பேசப் பழகுவார்.<br><br>• இலக்கம் 30 – 100 வரை அறிவார்.<br>• எதிர்கால சொற்களை பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கிப் பழுகுவார்.<br><br>• ஐ போன்ற வேற்றுமை உருபுகளை பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கி பேசப் பழகுவார்.<br><br>• எழுத்துக்களை எழுதிப் பழகுவார். | • வினா வினவுதல்<br>• பின்பற்றல்<br>• பயிற்சி முறை<br>• ஒலிப்பு முறை | 20 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | 7.1 வந்து, போய் போன்ற வாக்கிய முறைகளைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கி வாசிக்க, எழுத பேச கதைக்கப் பழகுவார்.<br><br>7.2தொலைபேசி உரையாடலுக்குச் செவிமடுத்து மறுமொழி சொல்லப் பழகுவர்.<br><br>7.3 வார நாட்களை அறிவர்.<br><br>7.4 அரை, கால், முக்கால் போன்றவற்றைப் பயன்படுத்தி நேரத்தைக் கூறுவர்.<br><br>7.5 இறந்தகால இடைநிலைகளான -ச்ச்-, -ந்த்- ஆகியவற்றை அறிவர்.<br><br>7.6 ஒ, ஓ, ஔ உயிர்மெய் எழுத்துக்களை எழுதப்பழகுதல். | • வந்து, போய் போன்ற சொற்களைப் பயன்படுத்திக் கதைத்தல்.<br><br>• வேற்றுமை உருபு -ட்டை-, -அட்டை-, -இட்டை- ஆகியவற்றைப் பயன்படுத்திக் கதைத்தல்.<br><br>• தொலைபேசி உரையாடல் செய்து பேசப் பழகுதல் .<br><br>• வார நாட்களை அறிதல்.<br><br>• அரை, கால், முக்கால் போன்றவற்றைப் பயன்படுத்தி நேரத்தை அறிதல்.<br><br>• இறந்தகால -ச்ச்-, ந்த்- இடைநிலைகளைப் பயன்படுத்திக் கதைத்தல்.<br><br>• எழுத்து ஒ, ஓ, ஔ உயிர்மெய் எழுத்துக்களை எழுதப்பழகுதல். | • வந்து, போய் போன்ற வாக்கிய முறைகளைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கி வாசிக்க, எழுத கதைக்கப் பழகுவார்.<br><br>• தொலைபேசி உரையாடலுக்குச் செவிமடுத்து மறுமொழி கூறுவார்.<br><br>• வார நாட்களை அறிவார்.<br><br>• அரை, கால், முக்கால் பொன்ற வற்றைப் பயன்படுத்தி நேரத்தை கூறுவார்.<br><br>• இறந்தகாலம் இடைநிலைகளான -ச்ச்-, -ந்த்- ஆகியவற்றைப் பயன்படுத்தி பேசப் பழகுவார்.<br><br>• ஒ, ஓ, ஔ உயிர்மெய் எழுத்துக்களை எழுதி உச்சரிக்கப் பழகுவர். | • வினா வினவுதல்<br>• பின்பற்றல்<br>• பயிற்சி முறை<br>• ஒலிப்பு முறை | 15 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | 8.1 இறந்த காலத்தை அறிவர்.<br><br>8.2 மாதங்களை அறிவர்.<br><br>8.3 திசைகள் அறிவர்.<br><br>8.4 “அ” எழுத்தின் மாற்றொலிகளை அறிவர். | • இறந்தகால இடைநிலைகளான -ஞ்ச்-, -ட்ட்-, -த்த்- ஆகியவற்றைப் பயன்படுத்திக் கதைத்தல்.<br><br>• மாதங்களை அறிதல்.<br><br>• திசைகளை அறிதல்.<br><br>• “அ” எழுத்தின் மாற்றொலிகளை அறிதல். | • இறந்த கால சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கி எழுதிப் பழுகுவார்.<br><br>• மாதங்களைச் சரியான முறையில் வாசிக்க , எழுதப் பழுகுவார்.<br><br>• திசைகளைச் சரியான முறையில் வாசிக்க , எழுதப் பழுகுவார்.<br><br>• “அ” எழுத்தின் மாற்றொலிகளை அறிவார். | • வினா வினவுதல்<br>• எடுத்துக் காட்டல்<br>• பின்பற்றல்<br>• பயிற்சி முறை<br>• ஒலிப்பு முறை | 15 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | 9.1 நான் என்ற தலைப்பில் கீழ் கட்டுரை எழுதுவர்.<br><br>9.2 இறந்த காலத்தை அறிவார்<br><br>9.3 வேற்றுமை உருபை அறிவார்<br><br>9.4 நினைக்கிறன், நினைவுக்கு வருகுது வைத்து பேசப்பமுகுவர்.<br><br>9.5 என்ரை பாடசாலை என்ற தலைப்பில் கீழ் கட்டுரை எழுதுவர்.<br><br>9.6 ஐ வேற்றுமை உருபை அறிவர்<br><br>9.7 இலக்கங்களை அறிவர்.<br><br>9.8“இ”எழுத்தின் மாற்றொலிகளை அறிவர் | • நான் என்ற தலைப்பில் கட்டுரை எழுதப்பழகுதல்<br><br>• இறந்த காலம் -இன்- இடைநிலையை வைத்து பேச, எழுதப் பழகுதல்.<br><br>• வேற்றுமை உருபு -ட்டை- , -இட்டை-, -அட்டை- ஆகியவற்றை வைத்து பேச, எழுதப் பழகுதல்.<br><br>• நினைக்கிறன், நினைவுக்கு வருகுது ஆகிய வேறுபாட்டை அறிதல்.<br><br>• என்ரை பாடசாலை என்ற தலைப்பில் கட்டுரை எழுதப் பழகுதல்.<br><br>• வேற்றுமை உருபு ஐ<br>• என்பதை வைத்து பேச, எழுதப் பழகுதல்.<br><br>• இலக்கம் 10 – 1000 வரை அறிதல். | • நான் என்ற தலைப்பில் கட்டுரை எழுதப்பழகுவார்<br>• இறந்த கால வாக்கியங்களை உருவாக்கி கதைக்கப்பழகுவார்.<br><br>• வேற்றுமை உருபை பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கி கதைக்கப்பழகுவார்<br>• நினைக்கிறன், நினைவுக்கு வருகுது இவற்றை வைத்து வாக்கியங்களை உருவாக்கிக் கதைக்கப் பழகுவார்<br>• ஐ வேற்றுமை உருபைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கிக் கதைக்கப் பழகுவார்<br>• 10 – 1000 வரை இலக்கங்களைச் சரியாக எண்ணி எழுதப் பழகுவார்<br><br>• “இ” எழுத்தின் மாற்றொலிகளை எழுதி<br>சரியாக<br>உச்சரிக்கப் பழகுதல். | • வினா வினவுதல்<br>• எடுத்துக் காட்டல்<br>• பின்பற்றல்<br>• பயிற்சி முறை<br>• ஒலிப்பு முறை | 15 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | 10.1 வினை எச்சங்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கிக் கதைக்கப்பழகுவர்<br><br>10.2 வேற்றுமை உருபு "ஆலை" என்பதை அறிவார்<br><br>10.3 இலக்கங்களை அறிவர்.<br><br>10.4 ஆர்……ஆர் என்பதைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கிக் கதைக்கப்பழகுவர்.<br><br>10.5 -இல்லாமல் என்பதைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கிக் கதைக்கப்பழகுவர்.<br><br>10.6 "எ" எழுத்தின் மாற்றொலிகளை அறிவர். | • வினை எச்சம்<br><br>• வேற்றுமை உருபு – ஆலை இவற்றைப் பயன்படுத்தி பேசப் பழகுதல்.<br><br>• இலக்கம் 1000 – கோடி வரை அறிதல்.<br>• ஆர்……ஆர்<br>• -இல்லாமல் ஆகியவற்றைப் பயன்படுத்தி கதைக்கப்பழகுதல்.<br><br>• "எ" எழுத்தின் மாற்றொலிகளை எழுதி உச்சரிக்கப் பழகுதல். | • வினை எச்சங்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கி கதைக்கப்பழகுவார்.<br><br>• –ஆலை வேற்றுமை உருபை வைத்து வாக்கியங்களை உருவாக்கப் பழகுவார்.<br><br>• 1000 – கோடி வரை இலக்கங்களைச் சரியாக எண்ணி எழுதப் பழகுவார்.<br><br>• ஆர்…..ஆர் என்பதைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கிக் கதைக்கப்பழகுவார்.<br><br>• -இல்லாமல் என்பதைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கி கதைக்கப்பழகுவார்.<br><br>• "எ" எழுத்தின் மாற்றொலிகனை எழுதி உச்சரிக்கப் பழகுதல். | • வினா வினவுதல்<br>• எடுத்துக் காட்டல்<br>• பின்பற்றல்<br>• பயிற்சி முறை<br>• ஒலிப்பு முறை | 15 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | 11.1 நேரம் பார்த்துக் கூறப் பழகுவர்.<br><br>11..2 அரை, கால், முக்கால், காலமை, பின்னேரம் போன்றவற்றைப் பயன்படுத்தி நேரம் பார்த்துக் கூற அறிவர்.<br><br>11.3முன்னுக்கு, முன்னாலை போன்ற சொற்களை வைத்து பேச்சு மொழியில் வாக்கியங்களை அமைத்துப் பேசப் பழகுவர்.<br><br>11.4 "உ" எழுத்தின் மாற்றொலிகளை அறிவர்.<br><br>11..5 "க" எழுத்தின் மாற்றொலிகளை அறிவர். | • நேரம் பார்த்துக் கூறல்<br><br>• அரை, கால், முக்கால், காலமை, பின்னேரம் போன்றவற்றை வைத்துக் கதைத்தல்.<br><br>• முன்னுக்கு, முன்னாலை என்ற சொற்களை வைத்துக் கதைத்தல்.<br><br>• "உ" எழுத்தின் மாற்றொலிகளை அறிந்து உச்சரித்தல்.<br><br>• "க" எழுத்தின் மாற்றொலிகளை அறிந்து சரியாக உச்சரித்தல். | • நேரம் பார்த்துக் கூறப் பழகுவார்.<br><br>• அரை, கால், முக்கால், காலமை, பின்னேரம் போன்றவற்றைப் பயன்படுத்தி நேரம் பார்த்துக் கூறப் பழகுவார்.<br><br>• முன்னுக்கு, முன்னாலை போன்ற சொற்களை வைத்து பேச்சு மொழியில் வாக்கியங்களை அமைத்துப் பேசப் பழகுவார்.<br><br>• "உ" எழுத்தின் மாற்றொலிகளை எழுதி உச்சரிக்கப் பழகுவார்.<br><br>• "க" எழுத்தின் மாற்றொலிகளை எழுதி உச்சரிக்கப் பழகுவார். | • வினா வினவுதல்<br>• எடுத்துக் காட்டல்<br>• பின்பற்றல்<br>• பயிற்சி முறை<br>• ஒலிப்பு முறை | 15 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | 12.1 பேச்சு மொழி எழுத்து மொழியாக மாறும் விதத்தை அறிவர்.<br><br>12.2 -இலை-, -இல், இலே போன்றவற்றைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கி கதைக்கப்பழகுவர்.<br><br>12.3 எழுத்துத் தமிழில் "நான்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுவர்.<br><br>12.4 -ட்டை, -இட்டை, -அட்டை, -இடம் வேற்றுமை உருபுகளைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கிக் கதைக்கப்பழகுவர்.<br><br>12.4 -ஓடை, -ஒடு வேற்றுமை உருபுகளைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கி கதைக்கப்பழகுவர்.<br><br>12..5 நிகழ்காலத்தை அறிவர். | • பேச்சு மொழி எழுத்து மொழியாக மாறும் விதத்தை அறிதல்<br><br>• -இலை-, -இல், இலே பேச்சு மொழி எழுத்து தமிழில் மாறுவதை அறிதல்.<br><br>• எழுத்துத் தமிழில் "நான்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுதல்.<br>• வேற்றுமை உருபு (ட்டை, இட்டை, அட்டை, இடம்) -ஓடை , -ஒடு மாறுவதை காற்றல்.<br>• நிகழ்காலம்<br>(-ற்-- -கிற்-, -கின்ற்-)<br>(-க்கிற்- - -க்கிற்-, -க்கின்ற்-)<br>(-யிற்- - -கிற்-, -கின்ற்-)<br>ஆகியவை மாறும் விதத்தை அவதானித்து பேச , எழுதப் பழகுதல். | • பேச்சுமொழி எழுத்துமொழியில் மாறும் விதத்தை அறிவார்.<br><br>• -இலை-, -இல், இலே ஆகிய உருபுகளைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கிக் கதைக்கப்பழகுவார்.<br><br>• எழுத்துத் தமிழில் "நான்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதிப் பழகுவார்.<br><br>• -ட்டை, -இட்டை, -அட்டை, -இடம் வேற்றுமை உருபுகளைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கி கதைக்கப்பழகுவார்.<br>• -ஓடை, -ஒடு ஆகியவற்றைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கிக் கதைக்கப்பழகுவார்.<br><br>• நிகழ்காலச் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கிப் பழுகுவார். | • வினா வினவுதல்<br>• எடுத்துக் காட்டல்<br>• பின்பற்றல்<br>• பயிற்சி முறை<br>• ஒலிப்பு முறை | 15 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13 | 13.1 க, ச, த, ப, ட, ற, ந, எழுத்துக்களின் மாற்றொலிகளை அறிந்து சரியாக உச்சரித்து எழுதப் பழகுவார்.<br><br>13.2 -ஆலை, -ஆல் வேற்றுமை உருபை அறிவர்.<br><br>13..3 எதிர்காலத்தை அறிவர் | • க, ச, த, ப, ட, ற, ந, எழுத்துக்களின் ாற்றொலிகளை அறிந்து சரியாக உச்சரிக்கப் பழகுதல்.<br><br>• வேற்றுமை உருபு - ஆலை, -ஆல் மாறும் விதத்தை அறிதல்.<br>• எதிர்காலம் -வ்-, -வ்-<br>எதிர்காலம் -ப்ப்-, -ப்ப்- பேச்சு , எழுத்து மொழியில் மாறாது இருப்பதை அறிதல். | • க, ச, த, ப, ட, ற, ந, எழுத்துக்களின் மாற்றொலிகளை அறிந்து சரியாக உச்சரித்து எழுதப் பழகுவார்.<br><br>• -ஆலை, -ஆல் வேற்றுமை உருபை பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கப் பழகுவார். | • வினா வினவுதல்<br>• எடுத்துக் காட்டல்<br>• பின்பற்றல்<br>• பயிற்சி முறை<br>• ஒலிப்பு முறை | 15 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 | 14.1 இறந்தகாலத்தை அறிவர்.<br><br>14.2 பேச்சுத் தமிழிலும் எழுத்துத் தமிழிலும் உள்ள வேறுபாடுகளை அறிந்து கொண்டு கட்டுரை எழுதுவர். | • இறந்தகால இடைநிலைகள் பேச்சுத் தமிழில் இருந்து எழுத்துத் தமிழுக்கு மாறும் விதத்தை அறிதல்.<br>-ச்ச்-, -த்த்-<br>-ந்த்-, -ந்த்-<br>-ண்ட்-, -ன்ற்-<br>-ஞ்ச்-, -ந்த்-<br>-த்த்-, -த்த்-<br>-த்-, -த்-<br>-ன்-, -ன்-<br>• எனது பாடசாலை<br>எனது ஊர் என்ற தலைப்புகளில் பேச்சு<br>எழுத்துத் தமிழில் கட்டுரை<br>எழுதுதல். | • இறந்த கால வாக்கியங்களை உருவாக்கி கதைக்கப்பழகுவார்.<br><br>• பேச்சுத் தமிழிலும் எழுத்துத் தமிழிலும் மாறும் விதத்தை அறிந்து கொண்டு கட்டுரை எழுதுவார். | • வினா வினவுதல்<br>• எடுத்துக் காட்டல்<br>• பின்பற்றல்<br>• பயிற்சி முறை<br>• ஒலிப்பு முறை<br>• இரு மொழி முறை | 15 |
| | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15 | 15.1 -கொண்டு என்ற சொல்லுருபைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கி கதைக்கப்பழகுவர்.<br><br>15.2 பேச்சு மொழியிலும் எழுத்து மொழியிலும் சொற்கள் வேறுபடும் விதத்தை அறிவர்.<br><br>15..3 கட்டுரை எழுதுவர். | • கொண்டு என்ற சொல்லுருபைப் பயன்படுத்தல்<br>• பேச்சு - எழுத்து<br>மேலை - மேல்<br>எண்டு - என்று<br>எண்ட - என்ற<br>எண்டால் - என்றால்<br>எண்டது - என்றது<br>வேறுபாட்டை அறிதல்.<br>• எமது நாடு என்ற தலைப்பில் கட்டுரை எழுதப் பழகுதல். | • -கொண்டு என்ற சொல்லுருபைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்கிக் கதைக்கப்பழகுவார்.<br>• பேச்சு மொழியிலும் எழுத்து எழுத்து மொழியிலும் சொற்கள் வேறுபடும் விதத்தை அறிவார்.<br>• கட்டுரை எழுதுவார். | • வினா வினவுதல்<br>• எடுத்துக் காட்டல்<br>• பின்பற்றல்<br>• பயிற்சி முறை<br>• ஒலிப்பு முறை | 15 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16 | 16.1 வாசிப்புத் திறனை மேம்படுத்துவர்.<br><br>16“2 கால உருபுகளை பேச்சு மொழியிலும் எழுத்து மொழியிலும் அறிந்து கொண்டு எதிர்கால , நிகழ்கால , இறந்தகால சொற்களை ஆக்கிப் பழகுவர்.<br><br>16.3 மேடையில் பேச்சு ஒன்றை தொடங்கும் முறையை அறிந்து கொள்வர்.<br><br>16.3 மொழிபெயர்ப்பதற்கு அறிந்து கொள்வர்.<br><br>16.4 பதவி வெற்றிடவிண்ணப்பத் தைச் சரியாக நிரப்புவதற்கு அறிந்து கொள்வர். | • வாசிப்பு<br>• கால உருபுகள் பேச்சு – எழுத்து வேறுபாடுகளை அறிதல்.<br>• மேடையில் பேச்சைத் தொடங்க முன் ஆரம்பிப்பது எப்படி என்பதை அறிதல்.<br>• மொழிபெயர்ப்பு செய்தல்.<br>• பதவி வெற்றிடம் போன்றவற்றை மொழிபெயர்ப்பு செய்தல். | • வாசிப்புத் திறனை மேம்படுத்துவார்<br><br>• கால உருபுகளை பேச்சு மொழியிலும் எழுத்து மொழியிலும் அறிந்து கொண்டு எதிர்கால , நிகழ்கால , இறந்தகால சொற்களை ஆக்கிப் பழகுவார்.<br>• மேடையில் பேச்சு ஒன்றைத் தொடங்கும் முறையை அறிந்து கொள்வார்.<br><br>• மொழிபெயர்ப்பதற்கு அறிந்து கொள்வார்.<br><br>• பதவி வெற்றிடம் ஒன்றைச் சரியாக நிரப்புவதற்கு அறிந்து கொள்வார்.<br><br>• மொழிபெயர்ப்பதற்கு அறிந்து கொள்வர். | • வினா வினவுதல்.<br><br>• எடுத்துக் காட்டல்<br>• பின்பற்றல்.<br>• பயிற்சி முறை | 15 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **17** | 17.1 மொழிபெயர்ப்பதற்கு அறிந்து கொள்வர்.<br><br>17.2 ஒருமை - பன்மை வேறுபாட்டை அறிந்து கொள்வர்.<br><br>17.3 திணைக்களங்களின் பெயர்களை அறிவர். | • மொழிபெயர்ப்பு<br>• ஒருமை - பன்மை வேறுபாட்டை அறிதல்.<br>• மொழிபெயர்ப்புச் செய்தல்<br>• திணைக்களங்களின் பெயர்களை அறிதல். | • ஒருமை - பன்மை வேறுபாட்டை அறிந்து கொண்டு பெயர்ச்சொற்களை ஒருமைக்கும் பன்மைக்கும் மாற்றிப் பழகுவார்.<br>• திணைக்களங்களின் பெயர்களை அறிவர்.<br>• மொழிபெயர்ப்பதற்கு அறிந்து கொள்வர். | • வினா வினவுதல்<br>• எடுத்துக் காட்டல்<br>• பின்பற்றல்<br>• பயிற்சி முறை | **15** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 18 | 18.1 கடிதம் எழுதப்பழகுவர்.<br><br>18.2 ஆணைக்குழுக்களை அறிவர்.<br><br>18.3 அதிகார சபைகளை அறிவர்.<br><br>18.4 சபைகளை அறிவர்.<br><br>18.5 கூட்டுத்தாபனங்களை அறிவர்.<br><br>18.6 சிங்களத்திற்கு மொழிபெயர்ப்பதற்கு அறிந்து கொள்வர். | • கடிதம் எழுதப்பழகுதல்<br><br>• ஆணைக்குழுக்களின் பெயர்களை அறிதல்.<br><br>• அதிகார சபைகளின் பெயர்களை அறிதல்.<br><br>• சபைகளின் பெயர்களை வாசித்தல்.<br><br>• கூட்டுத்தாபனங்களின் பெயர்களை வாசித்தல்.<br><br>• சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பழகுதல். | 18.1 கடிதம்எழுதப்ப ழகுவார்.<br><br>18.2 ஆணைக்குழுக்களை அறிவார்.<br><br>18.3 அதிகார சபைகளை அறிவார்.<br><br>18.4 சபைகளை அறிவார்.<br><br>18.5 கூட்டுத்தாபனங்களை அறிவார்.<br><br>18.6 சிங்களத்திற்கு மொழிபெயர்ப்பதற்கு அறிந்து கொள்வார். | • வினா வினவுதல்<br>• எடுத்துக் காட்டல்<br>• பின்பற்றல்<br>• பயிற்சி முறை<br>• ஒலிப்பு முறை<br>• இரு மொழி முறை | 15 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 19 | 19.1 சிங்களத்தில் மொழிபெயர்ப்பதற்கு அறிந்து கொள்வர்.<br><br>19.2 அலுவலகக் கடிதங்களை எழுதப் பழகுவர்.<br><br>19.3 விண்ணப்பக் கடிதங்களை எழுதுவர்.<br><br>19.4 வாசிப்புத் திறனை மேம்படுத்துவர்.<br><br>19.5 தமிழில் மொழிபெயர்ப்பதற்கு அறிந்து கொள்வர். | • சிங்களத்தில் மொழிபெயர்த்தல்.<br>• அலுவலகக் கடிதங்களை எழுதுதல்.<br>• விண்ணப்பக் கடிதம் எழுதுதல்.<br>• வாசிப்பு<br>• தமிழில் மொழிபெயர்க்கப் பழகுதல். | • சிங்களத்தில் மொழிபெயர்ப்பதற்கு அறிந்து கொள்வார்.<br><br>• அலுவலகக் கடிதங்களை எழுதப் பழகுவார்.<br><br>• விண்ணப்பக் கடிதங்களை எழுதுவார்.<br><br>• வாசிப்புத் திறனை மேம்படுத்துவார்.<br><br>• தமிழில் மொழிபெயர்ப்பதற்கு அறிந்து கொள்வார். | • வினா வினவுதல்<br>• எடுத்துக் காட்டல்<br>• பின்பற்றல்<br>• பயிற்சி முறை<br>• ஒலிப்பு முறை<br>• இரு மொழி முறை | 15 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 20 | 20.1 அமைச்சுக்களை அறிந்து கொள்வர்.<br><br>20.2 வாசிப்புத் திறனை மேம்படுத்துவர்.<br><br>20.3 மொழிபெயர்ப்பதற்கு அறிந்து கொள்வர். | • அமைச்சுக்களை அறிதல்.<br>• வாசிப்புத் திறனை அதிகரித்தல்.<br>• மொழிபெயர்ப்பு செய்யப்பழகுதல். | • அமைச்சுக்களை அறிந்து கொள்வார்.<br>• வாசிப்புத் திறனை மேம்படுத்துவார்.<br>• மொழிபெயர்ப்பதற்கு அறிந்து கொள்வார். | • வினா வினவுதல்<br>• எடுத்துக் காட்டல்<br>• பின்பற்றல்<br>• பயிற்சி முறை<br>• ஒலிப்பு முறை | 15 |

தொடர் மதிப்பீடு 15

மொத்தம் 250